திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இப்படிப் பயணிகள் தொத்திக்கொண்டு போவதால் இத்தகைய ஆக்சிடெண்டுகள் நடக்கின்றன. எனவே அந்த வாசலையே, பயணிகள் ஏறிவிட்டபிறகு மூடிவிடுவதற்கு கதவுபோட ஏதாவது வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, முதலில் கைப்பிடியைத் தடுத்துப் பார்ப்போம். பிறகு கதவடைப்பு செய்யலாம்.

THIRU K. M. SUBRAMANIAM: In view of the increasing accidents in the City, will the Government think of taking strong steps to clear the pavements, particularly in busy areas like Usman Road?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அரசாங்கம் அப்படிப்பட்ட நடவடிக்கைகளை ஏற்கனவே மேற்கொண்டிருக்கின்றது. ஆனால் பயணிகள் விரைவில் வீட்டுக்குச் செல்ல வேண்டுமென்ற அந்த வேகத்தில் இடையிலே இந்தக் காரியங்களிலே ஈடுபடுகிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இம்மாதிரி பீக் அவர்சில் இந்தக் கஷ்டங்கள் ஏற்படுவதால் முக்கியமான ஸ்டாண்டுகளில் கண்டிப்பாகக் க்யூ வரிசை இருக்கவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுமா? அதற்குத் தேவையான அதிகாரிகள் நிறுத்தப்படுவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்தபடி, க்யூ வரிசை இல்லாமல் நின்று கொண்டு இருப்பதால் இந்தக் கஷ்டங்கள் வருவதைச் சர்க்கார் உணர்ந்து அதற்கான நடவடிக்கைகளில் முதல் கட்டமாக 50 பேருந்துகள் நிற்கும் இடங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

திரு. கோவை செழியன்:

* * * *

MR. SPEAKER: This is not allowed. I order expunction. This may be expunged.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்:

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையும் எடுத்துவிட ஆணையிடுகிறேன். அது முடிந்த விவகாரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையும் எடுத்துவிட ஆணையிடுகிறேன். அது முடிந்த விவகாரம்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

TRUTH ALONE TRIUMPHS

### *Arrears on account of Thulasi Archana to Sri Ranganathaswamy Temple.*

* 462 Q.—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether representations have been received recently by the Department of Hindu Religious and Charitable Endowments to collect the arrears of the Thulasi Archana due to Sri Ranganathaswamy temple, Srirangam from Kodaraigulam Inam Estates, Ambasamudram in 1970 ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் ஸ்ரீரங்கத்தைப்பற்றி ஒரு கேள்வி கேட்கலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, இப்படி "அரியர்ஸ்" இருக்கின்ற காரணத்தினால், அந்த அரியர்ஸை வாங்க அரசாங்கமே ஏன் முன் வரவில்லை? அந்த அரியர்ஸ் ஸ்ரீரங்கநாத சுவாமிக்கு துளசி அர்ச்சனை மூலம் வரக்கூடிய ஒன்று என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஸ்ரீரங்கநாத சுவாமி தேவஸ்தானத்திற்கு நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த அம்பாசமுத்திரம், கோதரைகுளம் இனம் எஸ்டேட்டுகளிலிருந்து 21 எக்கர் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கான பட்டா கோயிலுக்கு வழங்கப்பட வேண்டுமென்று இந்த அறநிலையத்துறை சார்பாக நடவடிக்கை எடுத்த பொழுது, திருவாடுதுறை ஆதீனத்தைச் சார்ந்தவர்கள் அந்த நிலத்தை வாங்கி இருப்பதாகத் தெரியவந்தது. இந்த அறநிலையத்தார் "இனம் விசாரணை" மூலம் அந்த நிலம் ஸ்ரீரங்கநாத சுவாமி தேவஸ்தானத்திற்குத்தான் வழங்கப்பட வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். ஆனால், இந்த உத்தரவை எதிர்த்துத்தான் திருவாடுதுறை ஆதீனத்தார் ஹைகோர்ட்டிலே வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். எனவே, இதிலே பொறுத்திருந்துதான் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கநாதருக்கு கொடுக்க வேண்டிய கடன் இது. அதிலே திருவாடுதுறை ஆதீனம் கோர்ட்டுக்கு போயிருக்கிறார்கள் என்றால், இது நியாயமான முறையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: கொடுக்க வேண்டிய கடன் பாக்கிக்காக அவர்கள் கோர்ட்டுக்குப் போகவில்லை. ஸ்ரீரங்கநாத சுவாமி தேவஸ்தானத்திற்கு 21 ஏக்கர் நிலத்தை பட்டா வழங்கப்படுவதற்காக அறநிலையத்துறை ஆனது நடவடிக்கை எடுக்கும் நேரத்திலே, திருவாடுதுறை ஆதீனத்திற்கு அந்த நிலம் சம்மந்தமாக பட்டா வழங்கப்பட்டிருக்கிறது, அப்படிப்பட்ட பட்டா ஸ்ரீரங்கநாத சாமிக்குத் தான் வழங்கப்பட வேண்டுமென்று நாம் மேல் அதிகாரிகளிடத்திலே முறையிட்டுக் கொண்டோம். உடனே, திருவாடுதுறை ஆதீனத்தார் எங்களுக்குத் தான் அப்படி பட்டா பெற உரிமை இருக்கிறது என்று ரிட் மனு செய்து, ஹைகோர்ட்டு மூலமாக "ஸ்டே" வாங்கியிருக்கிறார்கள். எனவே, அது யாருக்குச் சேர்ந்தது என்பதை